பக்கங்கள்:-21

# காலை முரசு

## சிறையில் கம்பி எண்ணும் டக்ளஸைச் சந்தித்த நாமல்



துப்பாக்கிகாணாமல் போன வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் செயலாளர் 06

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 18 | ஞாயிற்றுக்கிழமை | 04.01.2026 | அதிர்வு 157



# மக்கள் போராட்டத்தை அரசு மலினப்படுத்த இடமளியோம்!

## தையிட்டி காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அதன் உரிமையாளர்கள் நேற்று கூட்டாகக் கோரிக்கை




(நமது நிருபர்கள்)

“எமது காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதே எமது திடமான கோரிக்கை. மக்கள் போராட்டத்தை அரசு மலினப்படுத்த ஒருபோதும் இடமளியோம்.” - இவ்வாறு தையிட்டி காணி உரிமையாளர்கள் கூட்டாகத் தெரிவித்தார்கள். 07

# அநுர ஆட்சியிலும் பௌத்த, சிங்கள மயமாக்கல்

## தையிட்டி போராட்டக் களத்தில் சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு




(நமது நிருபர்கள்)

தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் சிங்கள பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகளை மாறி மாறி வரும் அரசுகள் கையாண்டு வருகின்றன என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றஞ்சாட்டினார்.

தையிட்டி போராட்டக் களத்தில் நேற்று ‘முரசு’ ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கு – கிழக்கில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் புத்தர் சிலைகளை வலுக்கட்டாயமாக வைப்பதும், அந்த இடங்களை ஆக்கிரமித்து 06




வவுனியாவில் நேற்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் ஒரு திருப்பு முனையைத் தரலாம் என முன்னரே கோடி காட்டி இருந்தேன். எதிர்பார்த்தபடி, அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவியில் இருந்து விலகும்படி சிறிதரன் எம்.பியைப் பணிக்கும் முடிவு அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றது.

கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சத்தியலிங்கம், சாணக்கியன், குகதாசன் மற்றும் கலையரசன், துரைராஜசிங்கம் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் சுகவீனம் காரணமாகப் பங்கு பற்றவில்லை. சிறிதரனும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. பங்கு பற்றிய ஏனைய அனைவரும் ஏகமனதாக இந்த முடிவுக்கு வந்தனர் எனத் தெரிய வந்தது. சிறிதரனைப் பதவி விலகப் பணிப்புரை விடுக்கும் தீர்மானத்துக்கு மாறாக கூட்டத்தில் எந்த உறுப்பினரும் பேசவே இல்லை என்பது 06



# தமிழரசின் வவுனியா உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுடனாக விசேட கூட்டம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான 2026 ஆம் ஆண்டின் முதலாவது கலந்தாய்வு கூட்டம் நேற்று இடம்பெற்றது.

கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகமான தாயகத்தில் மாவட்டக்கிளைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், மாவட்ட உபதலைவர் பாலச்சந்திரன் சிந்துஜன், மாவட்ட செயலாளர் ந.கருணாநிதி, மாவட்ட பொருளாளர் சி.சந்திரசேகரம், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உபதவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

சபை நடவடிக்கைகளில் உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இடையூறுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் கட்சியின் கட்டுப்பாடுகளை மீறி நடக்கும் உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்படக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் பொதுச் செயலாளர் இதன்போது இறுக்கமாக தெரிவித்திருந்தார்.

சபை செயற்பாடுகளில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாக சகல உறுப்பினர்களும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்பதையும் அதனை மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதையும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.









# தமிழரசின் முல்லை. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல்

(விஜயரத்தினம் சரவணன்)

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுடனான கலந்துரையாடலொன்று நேற்று முல்லைத்தீவு - மாங்குளம் பகுதியில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் சி.விகே.சிவஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், பத்மநாதன் சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.







# தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி சுமந்திரன் விளக்கம்

(கி.வசந்தன்)

அரசமைப்புக் கவுன்ஸிலில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ராஜினாமா செய்ய வேண்டும் என பணிப்புரை வழங்குவதென இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசனுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கட்சியின் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் வவுனியா குருமன் காட்டில் அமைந்துள்ள தாயகம் அலுவலகத்தில் இன்று இடம்பெற்றது. இதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

## கரைத்துறைப்பற்று தவிசாளர்

கரைத்துறை பற்று பிரதேச சபை நிர்வாகம் கைமாறியுள்ளது. தேசிய மக்கள் சக்தி அதனைக் கைப்பற்றியுள்ளது. என்ன விடயங்களுககாக அது கைமீறிச் சென்றது என விசாரித்துள்ளோம். கரைத்துறைபற்று பிரதேச சபை தவிசாளராக இருந்த யோகேஸ்வரன் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருடைய பிரதேச சபை உறுப்புரிமையும் வறிதாக்கப்படும். ஆகையினால் அதைத் தொடர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம். அத்துடன் கட்சியின் ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர்களுக்கு சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கட்சியின் உத்தரவு மீறப்படும் சந்தர்ப்பத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது அவர்களுக்கு ஞாபகமூட்டப்பட்டிருக்கின்றது.

## மாகாணசபை தேர்தல்

அரசாங்கம் எல்லை மீள் நிர்ணயம் செய்த பின்னர் தான் மாகாணசபை தேர்தல் என்று கூறுவதை நாம் ஏற்கமுடியாது. தேர்தல் முறை மறுசீரமைப்பு என்பது ஒரு விடயம். ஆனால் மறுசீரமைப்பு செய்யப்படவில்லை என்பதற்காக தேர்தலே நடத்தாமல் இருப்பது ஏற்க முடியாத ஒரு விடயம். அதனை அரசுக்கு சொல்லியிருக்கிறோம். இந்தியவின் வகிபாகம் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளோம்.

அப்படி பார்த்தால் கடந்த இரு நாடாளுமன்ற தேர்தல்கள் நடாத்தியிருக்க முடியாது. எனவே தேர்தலை உரிய காலத்தில் நடாத்துவது அடிப்படையான விடயம். அரசானது தேர்தலுக்கு முகம் கொடுக்கப் பயந்து கொண்டு மாகாண சபை தேர்தலை காலவரையறையின்றிப் பிற்போட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. முடிந்தால் மாகாணசபை தேர்தலை உடனடியாக நடாத்துங்கள் என்று பகிரங்கமாக சவால் விடுக்கின்றோம். வடக்கு, கிழக்கில் அரசின் செல்வாக்கு பாரிய அளவு சரிவடைந்துள்ளது. மக்கள் தெளிவடைந்துள்ளனர். அதனை நடத்தினால் மண் கௌவ வீரகள் எனச் சவாலாக சொல்லிக்கொள்கிறோம்.

## பயங்கராவாதத் தடுப்புச் சட்டம்

அத்துடன் பயங்கரவாத தடுப்புச்சட்டம் முற்று முழுதாக நீக்கப்பட வேண்டும். மாற்றீடாக எந்த சட்டமும் தேவையில்லை என்று எங்களை விட தீவிரமாக இருந்த






வர்கள் இந்த ஜே.வி.பியினர். கடந்த காலங்களில் மாற்று வரைவுகள் வந்த போது இவர்கள் அந்த கூட்டங்களுக்கே வரமாட்டார்கள். அதனை நீக்குமாறு நாங்கள் நடத்திய போராட்டங்களில் ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்தும் அவர்கள் சார்ந்த முக்கியமான ஒருவர் பங்கு கொண்டிருந்தார். எனவே ஆட்சிக்கு வந்தவுடன் இருப்பதை விட மோசமான ஒரு வரைவு தற்போது வெளிவந்துள்ளது. பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாப்பதற்காகவாம் என்று கூறப்படுகின்றது. இது ஒரு நகைப்பிற்குரிய விடயம். அவ்வாறு எனில் மக்களை பாதுகாப்பதற்காக இல்லை. இதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அதில் உள்ள விடயங்கள் தொடர்பாக கட்சி சில கலந்துரையாடல்களை நடத்தும். அந்த வரைவை முற்றாக எதிர்க்கிறோம்.

## கட்சியில் இருந்து நீக்கம்

நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். இது ஒரு மோசமான குற்றச்சாட்டு. சட்டத்தின் முன் குற்றம் நிரூபிக்கப்படும் வரைக்கும் அவர் நிரபராதியாக இருந்தாலும் கூட ஒரு பொறுப்பான அரசியல் கட்சி என்ற ரீதியிலே இந்த செயற்பாட்டிற்கு இடம் கொடுக்க கூடாது. எனவே உடனடியாக அவரைக் கட்சியில் இருந்து நீக்குவது என்ற தீர்மானம் எடுத்திருக்கிறோம்.

## சிறிநேசன் மீது குற்றச்சாட்டு

அத்துடன் எங்களுடைய இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை தொடர்பாக பேசியிருக்கிறோம். குறிப்பாக கட்சியில் இருந்து நீக்கப்பட்ட அரியநேந்திரனை கட்சியின் நிகழ்வு ஒன்றில் முக்கியத்துவம் வழங்கியதான குற்றச்சாட்டு ஒன்று மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் மீது இருந்தது. கட்சி தீர்மானத்திற்கு மாறாக செயற்பட்டமையால் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ஒருவரே அரியநேந்திரன். அந்தத் தீர்மானத்துடன் இணைந்து செயற்பட வேண்டியது கட்சியில் இருக்கும் ஒவ்வொருவரின் கடமை. எனவே அவ்வாறு செயற்பட இடமளிக்க முடியாது என்ற விடயத்தையும் வலியுறுத்தியுள்ளோம்.

## சிறிதரன் பதவி விலக வேண்டும்

அத்துடன் தேசிய ரீதியில் ஒரு குற்றச்சாட்டு ஒன்று எமது நாடாளுமன்றக் குழுத்தலைவர் சிவஞானம் சிறிதரன் மீது முன்வைக்கப்பட்டுள்ளது. அரசமைப்பு சபையில் அரசுடன் இணைந்து அனைத்திற்கும் வாக்களித்தார் என ஒரு குற்றச்சாட்டு உள்ளது. விசேடமாக கணக்காளர் நாயகம் நியமனத்தில் ஓர் இராணுவ அதிகாரிக்கு சார்பாக வாக்களித்தார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இழப்பீட்டிற்கான அலுவலகத்திற்கும் இராணுவ அல்லது பாதுகாப்புத்தரப்பின் பின்புலத்தை சேர்ந்த இரண்டு பேருக்கும் சிறிதரன் சார்பாக வாக்களித்தமை மட்டுமல்லாமல் அவர்களைத் தெரிவு செய்கின்ற நேர்முகப் பரீட்சையிலும் தேர்வு செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டுக்கள் இருந்தன. அதனை அவர் மறுத்திருந்தார். ஆனால் அது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்த இருவரையும் நியமிக்கக் கூடாது என்று கட்சி ஜனாதிபதிக்கு கடிதம் எழுத வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு எழுதியிருந்தோம். எனவே அது ஒரு தர்மசங்கடமான நிலைமையை கட்சிக்கு ஏற்படுத்தியுள்ளது. இவர்களை நியமிக்கக் கூடாது என்று கட்சி கடிதம் எழுதியுள்ளது. ஆனால் கட்சியை சேர்ந்தவர் அவர்களைத் தெரிவு செய்துள்ளார்.

அத்துடன் அதற்கு முன்னரும் கூட இலஞ்ச, ஊழல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நியமனம் தொடர்பாக மத்திய குழு கூட்டத்தில் அவரிடம் விளக்கம் கேட்டிருந்தோம். கூடிய புள்ளி எண்ணிக்கையை பெற்றவருக்கு அந்த பதவியை வழங்காமல் இரண்டாவதாக வந்தவருக்கு அரசாங்கம் கொடுத்த போது அரசுடன் இணைந்து அவர் வாக்களித்தார் எனச் சொல்லப்பட்டது. அதற்கான நியாயப்பாடுகளைக் கட்சிக் கூட்டத்தில் அவர் சொல்லியிருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் பதவி தொடர்பான வாக்கெடுப்பிலும் அப்படி செயற்பட்டார் எனச் சொல்லப்பட்டிருந்தது. கணக்காளர் நாயகம் விடயத்தில் மூன்று தடவைகள் அவ்வாறு நடந்துள்ளது. இறுதியாகவே அந்த இராணுவ அதிகாரியும், அதற்கு முன்பு ஜனாதிபதி தனது நெருங்கிய நண்பரையும் பின்னர் இரண்டாம் நிலையில் இருக்கும் ஒருவரையும் பரிந்துரை செய்திருந்தார். இருப்பினும் அந்த மூன்றும் நிறைவேறவில்லை.

ஏனெனில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவரும் சிவில் சமூகத்தை சேர்ந்த மூவரும் சேர்ந்து அந்த பிரேரணைகளிற்கு எதிராக வாக்களித்திருந்தனர். ஆனால், அவர்களுக்குச் சார்பாக சிறிதரனின் வாக்கு உட்பட நான்கு வாக்குகள் கிடைத்தன. எனவே அரசுடன் இணைந்து இந்த வாக்கெடுப்பில் கலந்து கொண்டமை தொடர்பான குற்றச்சாட்டு அவருக்கு இருந்தது. ஏற்கனவே இது தொடர்பாக நாடாளுமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரச்சினையை எழுப்பியிருந்தார்.

சிறிதரன் பிரதிநிதித்துவப்படுத்துவது பிரதான எதிர்க்கட்சி தவிர்ந்த மற்றய எதிர்க்கட்சிகளை. எனவே அப்படியாக இருப்பவர் எல்லா விடயங்களிலும் கண்ணை மூடிக்கொண்டு அரசுக்கு சார்பாக வாக்களிப்பது தொடர்பான குற்றச்சாட்டு எட்டாவது தடவையாக நடந்துள்ளது. எனவே கட்சியையும் சங்கடப்படுத்தாமல் அவரையும் சங்கடத்திற்கு உட்படுத்தாமல் இருப்பதற்காக அரசமைப்புக் கவுன்ஸிலில் இருந்து அவர் ராஜினாமா செய்யவேண்டும் என்று பணிப்புரை வழங்குவது எனத் தீர்மானம் எடுத்துள்ளோம். - என்றார்.

# நிலாவெளி சிறு மீன்பிடித் தொழிலாளர்கள் கொழும்பில் சி.ஐ.டியில் நேற்று முறைப்பாடு



திருகோணமலை நிலாவெளி அடம்போடை பகுதியில் சிறு மீன்பிடி தொழிலாளர்கள் தங்கள் வாழ்வாரத்தைப் பாதுகாக்குமாறு கோரி கொழும்பு குற்றவியல் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

இது குறித்த பாதிக்கப்பட்ட தரப்பில் கூறப்பட்டவை வருமாறு:-

நிலாவெளி சிறுபிடி மீன்பிடியாளர் சங்கத்தின் தலைவர் நான். நாங்கள் சுமார் 450 குடும்பங்கள் உள்ளோம். எமது மீன் பிடியை மேற்கொள்ளும் காணியான சுமார் 150 ஏக்கரை தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். இது தொடர்பில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள துறை சார் அதிகாரிகளிடத்தில் முறையிட்டோம். எதுவித பலனும் இல்லை. இதனால் கொழும்பு குற்றவியல் திணைக்களத்தில் காணி மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளோம். மேலும் ஜனாதிபதி செயலகம், கடற்றொழில் அமைச்சு உள்ளிட்ட முக்கிய அரச திணைக்களங்களிலும் முறையிட்டுள்ளோம். இது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தி எங்கள் வாழ்வாதாரத்தை பாதுகாத்து தருமாறும் கோரிக்கை விடுக்கின்றோம். - என்றார்.





# ஜிந்துப்பிட்டியில் ஆருத்ரா தரிசனம் நிகழ்வு

கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஆருத்ரா தரிசனம் நேற்று சனிக்கிழமை பௌர்ணமி தினத்தன்று வெகுசிறப்பாக நடைபெற்றது.

நேற்று அதிகாலை 3.30 மணிக்கு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத நடராஜ பெருமான் வசந்த மண்டபத்தில் ஆருத்ரா தரிசனம், பசு தீபாராதனை, நடைபெற்று உள்வீதி வலம் வருவதைக் காணலாம்.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதில் முக்கிய விடயம்.

சிறிதரன் இல்லாமல் இந்தக் கூட்டம் அவர் பற்றிய தீர்மானம் எடுத்தமை குறித்து சில சமூக ஊடகங்களில் கருத்துக்கள் வெளியாகி இருந்தன.

கையிட்டிப் போராட்டத்தில் சிறிதரன் படு 'பிஸி'யாக இருந்தபோது – அவர் பிரசன்னம் இல்லாத நிலைமையைப் பயன்படுத்தி – தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு இப்படி ஒரு முடிவை எடுத்திருப்பதாக அந்த சமூக ஊடகப் பதிவுகளில் கூறப்பட்டிருந்தது. அது தவறு.

இந்தக் கூட்டம் ஆரம்பத்தில் நேற்றுக் காலையிலேயே நடைபெறுவதாக இருந்தது. ஆனால் தையிட்டிப் போராட்டத்தில் தான் பங்கு பற்ற வேண்டி இருப்பதால் காலையில் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என்ற தகவலை சிறிதரன் கட்சியின் தலைவருக்குத் தெரியப்படுத்திய தன் காரணமாகவே நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு இந்தக் கூட்ட நேரம் மாற்றப்பட்டது. சிறிதரனின் வசதிக்காகவே கூட்ட நேரம் இப்படி மாற்றப்பட்டது என்பதை முன்னரே என் பத்தியிலும் குறிப்பிட்டிருந்தேன்.

நேற்று வவுனியாவில் தமிழரசு அரசியல் குழுக் கூட்டம் நடைபெற்ற போது அந்தக் கூட்டத்தில் பங்குபற்றாத சிறிதரன், அதே நேரம் வடமராட்சியில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்ற ஓர் உதைபந்தாட்ட நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

ஆக, இந்தக் கூட்டத்தை சிறிதரன் தவிர்த்தார் என்பது வெளிப்படையான விடயம்.

பிரதான எதிர்க்கட்சி அல்லாத ஏனைய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதியாக அரசமைப்புக் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் சிறிதரன் அங்கு அரசு தரப்புக்கு ஆதரவாக எட்டுத் தடவைகள் (அதில் குறைந்தது நான்கு தடவைகள் இராணுவ மயப்படுத்தலுக்கு ஆதரவாக) செயல்பட்டு இருக்கின்றமை குறித்து நேற்றைய அரசியல் குழுக் கூட்டத்தில் விரிவாக பேசப்பட்டிருக்கின்றது. அதுவும் இந்த விவகாரத்தை ஒட்டி தமிழரசு கட்சி மத்திய குழு கூட்டத்தில் தெளிவான வழிகாட்டுதல்கள் ஏற்கனவே வழங்கப்பட்ட பின்னரும் அரசுத் தரப்போடு சேர்ந்து சிறிதரன் செயற்பட்டமை கட்சிக்கு அரசியல் ரீதியான நெருக்கடிகளைத் தந்திருப்பதாக நேற்று விவரிக்கப்பட்டது.

இந்த விடயத்தை ஒட்டி அரசியல் குழுவின் தீர்மானத்தை விளக்கி, கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் சுமந்திரன் அனுப்பி வைக்கும் தீர்மான அறிவிப்புக் கடிதத்தில் இந்த எட்டுச் சந்தர்ப்பங்கள் பற்றியும் தெளிவாக விளக்கப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

அரசியல் குழுவின் தீர்மானம் நாடாளுமன்ற உறுப்பினரைக் கட்டாயப்படுத்துமா, கட்டுப்படுத்துமா, அதற்கு சட்ட வலு உள்ளதா, அத்தகைய தீர்மானத்தைப் பின்பற்றி ஒழுக வேண்டிய கடப்பாடு நாடாளுமன்ற உறுப்பினருக்கு உள்ளதா, அதை சிறிதரன் பின்பற்ற அல்லது ஏற்றுச் செயற்பட மறுத்தால் நிலைமை என்ன என்பவை பற்றி எல்லாம் இனிமேல் நடக்கும் போதுதான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆயினும் அரசியல் குழு என்பது கட்சியின் கொள்கைகள், தீர்மானங்களை எடுக்கும் உயர்மட்டக் கட்டமைப்பு என்பது கவனிக்கப்பட வேண்டும். எனினும் ஒழுக்காற்று நடவடிக்கை போன்ற அதிகாரங்களைப் பிரயோகிக்கும் மத்திய குழு போன்று அரசியல் குழுவின் முடிவு கட்சிக்குள் வலுவானதா என்பதும் தெரியவில்லை.

ஆயினும் அரசியல் குழுவின் முடிவை கட்சித் தலைமை பீடத்தின் கொள்கைத் தீர்மானமாகக் கருதும் பொதுவான நிலைப்பாட்டை மத்திய குழு எப்போதும் கவனத்தில் கொள்ளும் என்றே கருதப்படுகின்றது.

அரசமைப்பு கவுன்ஸிலில் சிறிதரனின் செயற்பாடு தொடர்பாக அவரின் நெருங்கிய நண்பரான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. சில விடயங்களை குறிப்பிட்டிருந்தார். அப்படி இராணுவ மயப்படுத்தலுக்கு ஆதரவாக அரசமைப்புக் கவுன்ஸிலில் சிறிதரன் வாக்களித்தார் என்பதைத் தன்னிடம் ஒப்புக் கொண்டிருந்தார், அது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம், அது குறித்து சிறிதரன் மன்னிப்புக் கோர வேண்டும், திருத்தம் செய்ய வேண்டும் என்ற சாரப்பட கஜேந்திரகுமார் வலியுறுத்தி இருந்தார்.

இப்போது தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கஜேந்திரகுமாரின் நிலைப்பாட்டைத்தான் தன்னுடைய பணிப்புரை போல சிறிதரனுக்கு வழிநடத்தலாக வழங்கியிருக்கின்றது எனத் தோன்றுகின்றது.

நேற்றைய அரசியல் குழுக் கூட்டத்தில் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசனுக்கும் காட்டமாகக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கட்சி அவரிடம் மூன்று விடயங்களுக்காக மூன்று தடவைகள் விளக்கம் கோரியிருந்தது.

முதலாவது – கட்சியின் முடிவை மீறி ஜனாதிபதித் தேர்தலில் அரியநேத்திரனுக்கு ஆதரவாக பிரசார நடவடிக்கைகளில் இறங்கியமை. இரண்டாவது – உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரத்தின் போது நாடாளுமன்ற தேர்தலில் கட்சியின் நடவடிக்கைகளை, பிரசாரங்களை மோசமாக விமர்சித்துப் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டமை. மூன்றாவது – கட்சி நடத்திய மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவு நிகழ்வில் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட அரியநேத்திரனை மேடை ஏற்றியமை.

இந்த மூன்று விவகாரங்களையும் ஒட்டி தாம் அளித்த பதில் விளக்கத்தில் அந்த மூன்று செயல்களையும் தாம் செய்திருக்கின்றார் என்பதை தம்மை அறியாமலேயே சிறிநேசன் ஒப்பு கொண்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

அவரின் மூன்று விளக்கங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல என்பதை அவருக்குத் தெரியப்படுத்தி, இனிமேல் தொடர்ந்து இத்தகைய கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய நடவடிக்கைகளில் அவர் இறங்குவாராயின் விளக்கம் இன்றியே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவருக்கு இறுதி எச்சரிக்கையாகத் தெரியப்படுத்துவதற்கு அரசியல் குழு நேற்றுத் தீர்மானித்திருக்கிறது. இந்த முடிவை கட்சியின் செயலாளர் அவருக்கு எழுத்தில் அனுப்புவார் எனத் தெரிகிறது.

ஏற்கனவே நான் குறிப்பிட்டபடி அரசியல் குழுவின் இந்தத் தீர்மானம் சிறிதரனையோ சிறிநேசனையோ கட்சிக் கட்டமைப்பு முறையின் கீழ், சட்ட ரீதியாகக் கட்டுப்படுத்தும் வலிமை உடையதா என்பதை காலகதியில்தான் பார்க்க வேண்டும். ஆனால் அரசியல் குழு கட்சியின் உயர்மட்டத் தலைமைப் பீடமாக கருதப்படும் நிலையில், அதன் வழிகாட்டலை புறமொதுக்கி நடக்கக்கூடிய கட்சி பிரமுகர்கள் குறித்து மத்திய குழு எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதும் எதிர்பார்க்கத்தக்கதே.

அதுவும் கட்சியின் அரசியல் குழுவும் மற்றும் மத்திய குழுவும் இப்போது ஒழுங்கு நடவடிக்கைகளை எதிர்கொள்வோரின் பிடியிலிருந்து நழுவி விட்ட நிலையில், எதிர்காலப் போக்குகள் எப்படி அமையக் கூடும் என்பதை இப்போதே ஓரளவு ஊகிக்கக் கூடியதாகத்தான் இருக்கின்றது.

கட்சியின் உள்விவகாரம் தொடர்பான வழக்கு மற்றும் விடயங்களில் தனது அணியில் நிற்கிறார் என்று சிறிதரன் கருதிய அவரது சகா குகதாசன் (திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்) கூட நேற்று அரசியல் குழுக் கூட்டத்தில் பங்கு பற்றிய ஏனைய அனைவருக்கும் ஆமாப் போடுபவராகவே செயல்பட்டார் என்பதும், சிறிதரனுக்கு ஆதரவாக அவர் நிலைப்பாடு எடுக்கவே இல்லை என்பதும் ஆச்சரியத்திற்குரிய விடயங்கள்தான். கட்சிக்குள் சிறிதரனின் பிடிமானம் கிளிநொச்சி வரை சுருங்கிப் போய்விட்டதாகத்தான் தோன்றுகின்றது.

கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்படக்கூடிய ஒரு பிம்பமாக தன்னைக் காட்டிக் கொண்டிருந்த சிறிதரனின் நிலை – பிடி – கட்சிக்குள் தளர்ந்து வருவதாகவே தோன்றுகின்றது.

---

## சிறையில் கம்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ நேற்று சனிக்கிழமை சந்தித்துள்ளார்.

மஹர சிறைச்சாலைக்குச் சென்றே டக்ளஸைச் சந்தித்து நாமல் நலம் விசாரித்துள்ளார்.

மஹர சிறைச்சாலை வளாகத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட நாமல் எம்.பி., புலி டயஸ்போராக்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே டக்ளஸ் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் குற்றஞ்சாட்டினார்.

டக்ளஸ் தேவானந்தாவுக்கு இராணுவத்தால் வழங்கப்பட்ட துப்பாக்கிகளில் ஒன்று, பாதாள உலகக் குழு உறுப்பினர் வசம் சென்ற விவகாரம் தொடர்பிலேயே டக்ளஸ் தேவானந்தா அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஆட்கொலை விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர், கம்பஹா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

---

## அநுர ஆட்சியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விகாரைகளை அமைப்பதும், பின்னர் அந்த இடங்களைத் தமக்குச் சொந்தம் என அறிவிப்பதும், அதிலே சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதும், அதனூடாகச் சிங்கள பௌத்த மயமாக்கல் களை ஏற்படுத்துவதும் என மாறி மாறிவரும் அரசுகள் கையாண்டு வருகின்றன.

தையிட்டி நில மீட்புப் போராட்டம் வன்முறைப் போராட்டம் அல்ல. இது அறவழிப் போராட்டம் – உரிமைப் போராட்டம். மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் வரை இந்தப் போராட்டம் தொடரும்." – என்றார்.

(சிறீதரன் எம்.பியின் மேலதிக கருத்துக்களைக் காணொளியில் பார்வையிடுங்கள்)

# ஜனாதிபதி வேட்பாளர் சரியான தருணத்தில்

## மொட்டுக் கட்சி அறிவிக்கும் என்கிறார் நாமல்



"ஜனாதிபதித் தேர்தலுக்கு நாம் அஞ்சவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யாரென்பது உரியநேரத்தில்அறிவிக்கப்படும்."-என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள நாம் எந்த நேரத்திலும் தயாராக இருக்கின்றோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் விரைவில் முறைப்படியான அறிவிப்பு வெளியிடப்படும்.

அம்பாந்தோட்டையில் இருந்தாலும், கொழும்பில் இருந்தாலும் எமது கட்சிக்குரிய ஆலோசனையை வழங்கி கட்சியை மஹிந்த ராஜபக்ஷ திறம்பட வழிநடத்துவார்." - என்றார்.



# 1.7 பில்லியன் ரூபா செலவில் எஸ்.எஸ்.சீ மைதானம் புதுப்பிப்பு

கொழும்பு சிங்களீஸ் விளையாட்டுக் கழக எஸ்.எஸ்.சீ.மைதானத்தின், அனைத்து புதுப்பித்தல் பணிகளும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2026 ஆம் உலகக் கிண்ண இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் இந்த மைதானத்தில் நடைபெற உள்ள நிலையில் இந்த பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் பொருளாலர் சுஜிவ கோடலியத்த இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, உலகக் கிண்ண தொடருக்காக, மைதானத்தில் நிறுவப்பட்ட புதிய அதிநவீன எல்.ஈ.டி விளக்கு அமைப்பை நிறுவும் பணிகள் தற்போது இறுதி கட்டத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மைதானத்தின் உட்கட்மைப்பு மேம்பாடுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, வீரர்களுக்கான ஓய்வறை மேம்படுத்தல், அதிகாரிகள் மற்றும் நடுவர்களுக்கான புதிய அறைகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த புதுப்பித்தல் பணிகளுக்கான, மொத்த செலவு 1.7 பில்லியன் ரூபாய்க்கும் அதிகம் எனவும் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் பொருளாளர் சுஜிவ கோடலியத்த குறிப்பிட்டுள்ளார்.

### மக்கள் போராட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தையிட்டியில் மக்களின் காணிகளைச் சுவீகரித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராகவும், மக்களின் காணிகளை முழுமையாக விடுவிக்கக் கோரியும் விகாரை முன்பாக நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தின்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்கள்.

இது தொடர்பில் 'முரசு' ஊடகவியலாளர்களிடம் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"தையிட்டி போராட்டக் களத்தில் இன்று மக்கள் கூட்டம் அலைமோதியுள்ளது.

திஸ்ஸ விகாரைக்காகக் கையகப்படுத்தப்பட்ட மக்களின் காணிகளில் விகாரை அமைந்துள்ள காணியைத் தவிர ஏனைய காணிகள் 4 கட்டங்களாக விடுவிக்கப்படும் என்று யாழ். மாவட்ட செயலகத்தில் காணி உரிமையாளர்களுடன் நடத்திய கலந்துரையாடலின்போது மாவட்ட செயலர் யோசனை ஒன்றை முன்வைத்திருந்தார். ஆனால், காணிகள் விடுவிக்கப்படும் 4 கட்டங்களுக்கும் நாங்கள் காலவரையறையை விதித்திருந்தோம். இதன்போது மாவட்ட செயலாளர் தடுமாறினார். அவர் அந்த யோசனையில் இருந்து பின்வாங்குகின்றார் என்று எங்களுக்கு உடனே தோன்றியது.

இதுவரைக்கும் மாவட்ட செயலகத்தில் இருந்து காணி விடுவிப்பு தொடர்பில் எங்களுக்கு உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவும் வரவில்லை.

காணி விடுவிப்பு தொடர்பாக யாழ். மாவட்ட செயலர் முன்வைத்த யோசனை, இன்றைய எமது போராட்டத்தை மலினப்படுத்துவதற்காக அல்லது செயலிழக்கச் செய்வதற்காக அரசால் வகுக்கப்பட்ட உத்திதான் என்று நாங்கள் எண்ணுகின்றோம்.

எமது காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதே எமது திடமான கோரிக்கை.

எமது இன்றைய போராட்டம் தொடர்பாக யாழ். மாவட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கும், வெகுஜன அமைப்புகளுக்கும் அறிவித்தலை வழங்கியிருந்தோம். அதற்கமைய அவர்கள் முழுமையாக வந்து இந்தப் போராட்டத்தில் பங்குபற்றினார்கள். வவுனியா, முல்லைத்தீவில் இருந்தும் கூட மக்கள் வந்து இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

அவர்கள் தன்னார்வத்துடன் வந்து இந்தப் போராட்டத்தில் பங்குபற்றினார்கள். எங்கள் போராட்டத்தை அவர்கள் தங்கள் போராட்டமாக நடத்தினார்கள். இது எமது போராட்டத்துக்குப் பெரும் பலத்தைச் சேர்த்துள்ளது. எமது காணிகள் முழுமையாக விடுவிக்கப்படும் வரை நாங்கள் தொடர்ந்து போராடுவோம்." - என்றார்கள்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசமைப்புக் கவுன்ஸில் நெருக்கடி

அரசமைப்புக் கவுன்ஸிலில் இருந்து விலகும்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரனுக்குப் பணிப்புரை விடுக்கக் கட்சியின் அரசியல் குழு நேற்று மாலை முடிவெடுத்த சூழ்நிலையில், அத்தகைய அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவியை விட்டு ஒருவர் விலகினால், அடுத்த நடவடிக்கை என்ன என்பது குறித்து ஆளும் தரப்பின் உயர் வட்டாரங்கள் நேற்று முன்னிரவில் நாடாளுமன்ற உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர் என்று செய்திகள் கிடைத்தன.

ஆக, தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் வவுனியாக் கூட்டத்தின் முடிவு உடனடியாக கொழும்பில் அரச உயர் மட்டத்தில் பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தியிருப்பதை உணர முடிகின்றது.

எது, எப்படி என்றாலும், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வலுவையும், நிறைவேற்றதிகாரத்தையும் கைகளில் வைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தி, உயர் பதவிகளுக்கு ஆள்களை நியமிக்கும் அதிகாரங்களைக் கொண்ட அரசமைப்புக் கவுன்ஸிலில் கனகச்சிதமாக பூட்டில் - பொறியில் - சிக்கி இருப்பதாகவே தெரிகின்றது.

கவுன்ஸிலில் அதன் தலைவரான சபாநாயகரைத் தவிர, ஒன்பது உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் உரித்து உண்டு. எதிர்க்கட்சித் தலைவரும், அவரது கட்சியின் பிரதிநிதியும், மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளும் என ஐவர் ஒருதரப்பில் இருக்கின்றமையால், பிரதான எதிர்க்கட்சி தவிர, ஏனைய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதியான சிறிதரனை வளைத்துப் பிடித்துத் தமது கைகளில் ஆளும் தரப்பினர் வைத்திருந்தாலும் கூட, அவர்களால் கவுன்ஸிலில் பெரும்பான்மையை பெற முடியாத நிலைமையே நீடிக்கின்றது.

தற்போதைய சிவில் பிரதிநிதிகள் மூவரினதும் பதவிக்காலம் நேற்று முன்தினத்துடன் காலாவதியானாலும், புதிய மூவர் நியமிக்கப்படும் வரை இப்போதுள்ள இந்த மூவரின் பதவிக் காலமும் தொடரும் என்று சட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் இணக்கத்துடன் புதிதாக மூவரை சபாநாயகர் தெரிவு செய்ய வேண்டும். இதில் முக்கிய நிபந்தனை, அப்படித் தெரிவு செய்யப்படுபவரை பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் ஏற்று அங்கீகரித்தால் மட்டுமே அவர்கள் கவுன்ஸில் உறுப்பினர்களாக முடியும். அரசு தரப்பு - சபாநாயகர் - யாரைக் கொண்டு வந்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் அதற்கு இணங்காமல் விட்டால், அத்தகைய இணக்கம் வரும் வரை இப்போதைய மூன்று சிவில் பிரதிநிதிகளும் தொடர்ந்து பதவியில் இருப்பார்கள் என்பதுதான் நிலைமை.

இவ்விவகாரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தம்முடைய உறுதிப்பாட்டை தெளிவாக்கி, அதில் உறுதியாக நின்றால், இப்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின் மூலம் அரசமைப்புக் கவுன்ஸிலை தங்களுக்கு சாதகமாக அரசு தரப்பு மாற்றவே முடியாது என்றே தோன்றுகின்றது.

நிலைமை எல்லை மீறினால், தன்னிடமுள்ள வலிமையான நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி அரசமைப்பு கவுன்ஸிலுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது தொடர்பான சட்ட விதிகளை, புதிய சட்டங்களைக் கொண்டு வந்து மாற்றுவதன் மூலம், அதன் பின்னர் அரசமைப்புக் கவுன்ஸிலை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய முடியும்.

அரசமைப்பு கவுன்ஸிலை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு வேறு வழியின்றி அரசமைப்பையே இடைக்காலமாக திருத்துவதற்கு இந்த ஆட்சி பீடம் முயன்றாலும் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

ஏனென்றால் அரசமைப்பு கவுன்ஸிலில் தான் நினைத்ததைச் செய்ய முடியாத அரசாங்கத்தின் கையறு நிலை, அதனை பெரும் தடுமாற்றத்துக்கு உட்படுத்தியிருக்கின்றது என்பது கண்கூடு. அதிலிருந்து வெளியில் வருவதற்காக தற்போதைய அரசமைப்பில் விரைந்து ஒரு திருத்தத்தை இந்த அரசு கொண்டுவர முயன்றாலும் முயலலாம்.




# தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக லண்டனில் நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டம்


(பா.சதீசன்)

யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரித்தானியாவில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றையதினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக மக்களால் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டத்தில் கடந்த மார்கழி 21 ஆம் திகதியன்று மதகுரு வேலன் சுவாமி உட்பட 5 தமிழர்கள் இலங்கைப் பொலிஸாரால் காட்டுமிராண்டித் தனமாக தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டமையைக் கண்டித்தும், தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக் கோரியும் நேற்றையதினம் லண்டனில் பிரதமர் இல்லம் அமைந்துள்ள டோவ்னிங் (Downing street) பகுதியில் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது.

தமிழர்கள் ஓரணியில் ஒன்று பட்டு உரிமைக்காய் குரல் கொடுப்போம் எனும் தொனிப்பொருளோடு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான புலம்பெயர் உறவுகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.










# மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த 16 வயது சிறுவன் பஸ்ஸுடன் மோதி பலி

## பின்னால் அமர்ந்து பயணித்த மற்றொரு சிறுவன் படுகாயம்

**(க.மகாதேவன்)**

கோர விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொரு சிறுவன் படுகாயமடைந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் கேகாலை, அரக்கம்மண பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தலைக்கவசம் இல்லாமல், அனுபவமற்ற சிறுவன் ஒருவரால் கட்டுப்பாடின்றி செலுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், எதிரே வந்த அரச பஸ்ஸுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் 16 வயதுடைய சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணித்த மற்றொரு சிறுவன் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.





# சுற்றாடல் சட்டங்களை மீறியதால் பலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

சுற்றாடல் சட்டங்களை கடுமையாக மீறியுள்ள நபர்கள் தொடர்பில் கடந்த நாள்களில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யூ. வூட்லர் கூறினார்.

மக்கள் மத்தியில் சென்று அவர்கள் எதிர்கொண்டுள்ள சுற்றாடல் ரீதியான சிக்கல்களுக்கு தீர்வு வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நடைபாதைக்கு இடையூறு ஏற்படுத்தல், நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் காணப்படுதல் மற்றும் முறையற்ற விதத்தில் குப்பைகளை வெளியேற்றுதல் போன்ற சுற்றாடல் நடவடிக்கை மீறல்கள் தொடர்பில் அவதானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான சுற்றாடல் சிக்கல்கள் தொடர்பில் பொதுமக்களை தெளிவுபடுத்தவும் சட்டத்தை மீறி செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஃப். யூ.வூட்லர் தெரிவித்தார்.



# வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் தேர்தல்களில் வாக்களிக்கச் சந்தர்ப்பம்

வெளிநாடுகளிலுள்ள இலங்கை பிரஜைகளுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதிஅமைச்சர் அருண் ஹேமசந்திரா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தல்களின் போது முன்னோடி வேலைத்திட்டமாக இதனை முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவே தீர்மானங்களை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னோடி வேலைத்திட்டத்தை செயற்படுத்தும் யோசனைகளை தமது அமைச்சினூடாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு சமர்பித்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கை பிரஜைகள் வாக்களிப்பதற்கான முறைமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் நடைபெறும் எனவும் பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா கூறினார்.



# நாட்டில் அடுத்துவரும் நாள்களில் மழையுடனான வானிலை அதிகரிப்பு

நாட்டில் அடுத்துவரும் நாள்களில் வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மழையுடனான வானிலையில் அதிகரிப்பு ஏற்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இலங்கையின் கிழக்கே வளிமண்டலத்தில் உருவாகிவரும் தளம்பல் நிலை வலுவடைந்து வருவதன் காரணமாகவே மழையுடனான வானிலையில் அதிகரிப்பு ஏற்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு, மத்திய, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்னெச்சரிக்கை பிரிவு தெரிவித்துள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா, பொலன்னறுவை மாவட்டங்களின் சில பகுதிகளிலும் 75 மில்லி மீற்றருக்கும் அதிக பலத்த மழை பெய்யக்கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வட மாகாணத்தில் இடைக்கிடை மழை பெய்யக்கூடும் என்பதுடன் நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் 02 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

# சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிட 8 லட்சம் அட்டைகள் கிடைத்தன




சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்காக 8 லட்சம் அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது அட்டை விநியோக நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை 240,000 சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்பட்டு, அவற்றை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம்வைத்திருக்கும்அனைவருக்கும், எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்குள் நிரந்தர அட்டைகளை அச்சிட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அட்டை தட்டுப்பாடு காரணமாக சுமார் 4.5 லட்சம் பேருக்குத் தற்காலிக அனுமதிப்பத்திரங்களே வழங்கப்பட்டிருந்தன.

இதில் எஞ்சியுள்ள 210,000 அட்டைகளும் பெப்ரவரி இறுதிக்குள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளன.

பொதுவாக மாதத்திற்கு 60,000 முதல் 80,000 புதிய சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்படுகின்றன.

தற்போது போதியளவு அட்டைகள் "ஓடர்" செய்யப்பட்டுள்ளதால், இனிவரும் காலங்களில் அட்டை தட்டுப்பாடு ஏற்படாது என ஆணையாளர் நாயகம் உறுதியளித்துள்ளார்.



# தெங்கு சார்ந்த உற்பத்திகளால் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

தேங்காய் மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதிகளினால் ஈட்டப்பட்ட அந்நிய செலாவணி வருமானம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை கடந்துள்ளது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தரவுகளுக்கமைய 2025 ஜனவரி முதல் ஒக்டோபர் வரையிலான காலப்பகுதியில் இதனூடாக ஈட்டப்பட்ட வருமானம் ஆயிரத்து 33 தசம் 9 மில்லியன் டொலர் வரை அதிகரித்துள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது இது 43. 83 வீத அதிகரிப்பு எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முழுத் தேங்காய் ஏற்றுமதியை விட பெறுமதி சேர் தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதி அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதன்படி தேங்காய்ப் பால், தேங்காய் எண்ணெய், தேங்காய் க்ரீம், நீரற்ற தேங்காய், எக்டிவேடட் கார்பன் மற்றும் கொகொ பீட் உள்ளிட்ட உற்பத்திகளுக்கான கேள்வி சர்வதேச அளவில் உருவாகியுள்ளதாகவும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 7.2 வீதத்தை தெங்கு சார்ந்த உற்பத்திகளே கொண்டுள்ளன என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டாகும் போது தெங்கு ஏற்றுமதி துறையில் அந்நிய செலாவணி வருமானத்தை 2.5 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதுடன் அதற்கு நீண்டகால திட்டமாக வடக்கு, தெங்கு முக்கோண வலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு கூறியுள்ளது.

இதில் 16,000 ஏக்கர் உட்பட மொத்தமாக 36,000 ஏக்கரில் புதிதாக தென்னங் கன்றுகளை நடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தரம் 6 பாடப்புத்தக சர்ச்சை விடயத்தில் பிரதமர் ஹரிணி பதவி விலக வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



தரம் 6 மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடப் புத்தகத்தில் காணப்பட்ட தவறுகள் தொடர்பில் அமைச்சு அதிகாரி ஒருவர் பதவி விலகுவதை விட, கல்வி அமைச்சராக இருக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரியவே பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் பதவி விலகியுள்ளமையைச் சுட்டிக்காட்டிய அவர், அந்தக் குழுவின் தலைவரை நியமித்தவர் பிரதமர் என்பதால், அதற்கு அவரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

பாடப்புத்தக விவகாரம் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதை நாமல் ராஜபக்ஷ கேலி செய்துள்ளார்.

மேலும், அமைச்சிற்கு வெளியே உள்ள ஒருவரால் இந்தப் புத்தகத்தை அச்சிட முடியாது என்றும் அமைச்சிற்குள்ளேயே தான் இது அச்சிடப்பட்டிருக்க வேண்டும் எனவும் கூறி முறைப்பாடு செய்வது வேடிக்கையானது என அவர் கூறினார்.

அமைச்சின் செயலாளரை யாரும் ஏமாற்ற முடியாது என்றும், ஒரு தனிநபர் ஒரு பாடப்பரப்பு தொடர்பாக தன்னிச்சையான முடிவுகளை எடுக்க முடியாது என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.









# கல்வி சீர்திருத்தம் என்ற பெயரில் முறைசாரா நடவடிக்கை முன்னெடுப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கல்வி சீர்திருத்தம் என்ற பெயரில் முறைசாரா நடவடிக்கையை ஊக்குவித்து, இந்நாட்டின் இலவசக் கல்வியை சீரழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

கரம்பேத்தர ஸ்ரீஅபயராஜராமய விகாரையில் நேற்று நடைபெற்ற மத நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கராவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறைமை, நவீன உலகிற்கு ஏற்ப மாற்றமடைய வேண்டும் என்பதைத் தாம் ஏற்றுக்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்ப புரட்சிகள் வேகமாக இடம்பெற்று வரும் நிலையில், நாமும் அதற்கேற்ப மாறாவிட்டால் பல தசாப்தங்கள் பின்னோக்கி தள்ளப்படுவோம் என அவர் எச்சரித்தார்.

கல்வியில் நவீன தொழில்நுட்பங்களான ரோபோடிக்ஸ் மற்றும் செயற்கை நுண்ணறிவு இணைக்கப்பட வேண்டும்.

அதேவேளை, எமது நாட்டின் கலாசாரம், பண்பாடு மற்றும் விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

குறிப்பாக, வரலாறு ஒரு கட்டாய பாடமாக இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

நவீனமயமாக்கல்என்றபெயரில்கல்வி முறைக்குள் முறைசாரா விடயங்களைப் புகுத்துவதை வன்மையாகக் கண்டிப்பதாக அவர் தெரிவித்தார்.

இது நாட்டின் கலாசாரத்திற்கு முரணானது எனவும், எதிர்கால சந்ததியினரை முழுமையாக அழிக்கும் செயல் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்விக்காக கோடிக்கணக்கான பணம் ஒதுக்கப்பட்ட போதிலும், இன்று அச்சிடப்பட்ட பாடப்புத்தகங்களில் இருந்து சில பக்கங்களை கிழித்துவிட்டு மாணவர்களுக்கு வழங்க வேண்டிய துரதிஷ்டவசமான நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பின்னால் உள்ள சதியை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரினார்.





# 'தாய் மண்ணை மீட்ட முதல் பெண் போராளி' வேலு நாச்சியார் சிலைக்கு விஜய் மரியாதை!



ஆயுதம் ஏந்திப் போராடி தாய் மண்ணை மீட்ட முதல் இந்தியப் பெண் போராளி என்று புகழாரம் சூட்டியுள்ள த.வெ.க. தலைவர் விஜய், வேலு நாச்சியாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

"விடுதலைப் போராட்டத்தில் ஆங்கிலேயர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடி, தாய் மண்ணை மீட்ட முதல் இந்தியப் பெண் போராளி. சமூக சமய நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த எழுச்சிக் கனல்.

எம் கொள்கைத் தலைவர், வீரமங்கை ராணி வேலு நாச்சியாரின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னையில் கழகத்தின் தலைமை நிலையச் செயலகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினேன்.

தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்த வீரமங்கை ராணி வேலு நாச்சியார் வழியில், மக்கள் விரோத ஆட்சியாளர்களை விரட்டி, மக்கள் விரும்பும் மக்களாட்சியை அமைக்க உறுதியேற்போம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# திராவிடம் என்பது தமிழ் தேசியத்துக்கு எதிரானதென கற்பித்தவர் திருமாவளவன்

## சீமான் தெரிவிப்பு



"திராவிடமும் தமிழ் தேசியமும் ஒன்று தான் என திருமாவளவன் தற்போது பேசுகிறார். ஆனால், திராவிடம் என்பது தமிழ் தேசியத்துக்கு எதிரானது என கற்பித்தவர் திருமாவளவன் தான்."

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாள சீமான் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறையில் நடைபெறும் பெரியாரை போற்றுவோம் நிகழ்வில் பங்கேற்பதற்காக திருச்சி விமான நிலையம் சென்ற நா.த.க. ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"என் இன மக்கள் 20 ஆயிரம் பேருக்கு மேல் கொன்று குவித்தது இந்த நாட்டு இராணுவம். அதை அனுப்பியது ராஜீவ் காந்தி. என் இனத்தையே அழித்தவர்களுக்கு அந்த அளவுக்கு நாம் இடம் கொடுத்து விட்டோம்.

அவர்களுடன் கூட்டணி வைத்து எந்த தமிழ் மக்களை கொன்று குவித்தார்களோ, அவர்களின் வாக்கை வாங்கி அரசியல் அதிகாரத்தை பெற்றுக் கொடுத்தால், இன்று எங்கள் தலைவர் பிரபாகரன் படத்தை வைத்தால் நாங்கள் வரமாட்டோம் என்கின்றார்கள். தன்மானமிக்க தமிழ் மக்கள் அவர்களுக்கு வாக்களிக்க மாட்டோம் என முடிவெடுக்க மாட்டேன் என்கிறார்கள். ஆனால் அவர்களுடன் மாறிமாறி கூட்டணி வைத்ததால்தான் காங்கிரஸ் கட்சியினர் இதுபோல் பேசுகிறார்கள்.

திராவிடமும் தமிழ் தேசியமும் ஒன்று தான் என திருமாவளவன் தற்போது பேசுகிறார். ஆனால் திராவிடம் என்பது தமிழ் தேசியத்துக்கு எதிரானது என கற்பித்தவர் திருமாவளவன் தான். திராவிடம் தமிழை எங்கே காக்கிறது? தமிழ்நாட்டில் தமிழ் படிக்கவோ, பேசவோ, எழுதவோ தெரியாதவர்கள் தான் அதிகம் இருக்கிறார்கள். மொழி, கலை, இலக்கியம், வரலாறு, அரசியல் என தமிழர்களுக்கு எதுவும் இல்லாமல் போய்விட்டது.

இந்தி எதிர்ப்புக்காக போராடிய மாணவர்களை துப்பாக்கியால் சுடச் சொன்னவர் பெரியார். தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் இந்தி உள்ளது. இந்தி எதிர்ப்பு என்பது ஒரு நாடகம் தான். திருமாவளவன் தேவைக்கேற்ப மாற்றி மாற்றி பேசுகிறார்.

காங்கிரஸ் – பா.ஜ.க, திமுக –அ.தி.மு.கவிற்கு எந்த கோட்பாடு மாற்றமும் கிடையாது. தி.மு.கவிற்கு மாற்று அ.தி.மு.க. என கூறுவது வெறும் வார்த்தையில் தான் கொள்கையில் எந்த மாற்றமும் கிடையாது. தூத்துக்குடி துப்பாக்கி சூடு, கொடநாடு கொலை கொள்ளை விவகாரம் உள்ளிட்டவற்றில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இருவரும் கூட்டு களவாணிகள். தமிழ்நாட்டையார் அதிகம் நாசம் செய்வது என்பதில்தான் தி.மு.கவிற்கும் அ.தி.மு.கவிற்கும் இடையே போட்டி உள்ளது.

ஆயிரம் அமித்ஷாக்கள் வந்தாலும் தமிழகத்தில் எந்த மாற்றமும் இருக்காது. தீயசக்திக்கு மாற்று தூயசக்தி, தூய ஆற்றல் தான். எங்களைப்போல தொடர்ச்சியாக மாறுதலுக்காக போராடும் பிள்ளைகள் தான் இவர்களுக்கு மாற்றாக இருக்க முடியும்.

கோட்பாடு அளவில் நீங்கள் திராவிடர் திராவிடம், நாங்கள் தமிழர்கள் தமிழ் தேசியம். தத்துவ மாற்று தான். நீங்கள் லஞ்சம், ஊழல் என்கிறீர்கள். நாங்கள் உண்மை, நேர்மை என்கிறோம். இதுதான் மாற்றமாக இருக்க முடியும்." என்று தெரிவித்துள்ளார்.

# சுமார் 200 பேருடன் பயணித்த புலம்பெயர்ந்தோர் படகு விபத்து!

ஐரோப்பாவை அடைய முயன்ற சுமார் 200 புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற படகு காம்பியா கடற்கரையில் கவிழ்ந்ததில் குறைந்தது 7 பேர் இறந்துள்ளனர் மற்றும் பலர் காணாமல் போயுள்ளனர் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வடக்குக் கரைப் பகுதியில் உள்ள ஜினாக் கிராமத்திற்கு அருகே புதன் கிழமை நள்ளிரவு படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

பின்னர் அது கரையில் தரையிறங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக காம்பிய பாதுகாப்பு அமைச்சு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதுவரை குறைந்தது 90 பேர் மீட்கப்பட்டுள்ளனர், ஏனையவர்களை தேடும் பணிகள் தீவிரவப்படுத்தப்பட்டுள்ளன.


இந்தக் கப்பல் ஸ்பெயினின் கேனரி தீவுகளை நோக்கிச் சென்று கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பாவை அடைய முயற்சிக்கும் ஆப்பிரிக்க குடியேறிகளுக்கு அட்லாண்டிக் பெருங்கடலின் மீது ஆபத்தான பயணம் பெருகிய முறையில் பொதுவான பாதையாக மாறியுள்ளது.

2024 ஆம் ஆண்டில் சுமார் 47,000 பேர் கேனரி தீவுகளை அடைந்தனர்.

மேலும் 9,000க்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தோர் முயற்சியில் இறந்ததாக ஸ்பானிஷ் அரசு சாரா அமைப்பான காமினாண்டோ ஃபிரான்டெராஸ் கூறியுள்ளது.





# வெனிசுவேலா எண்ணெய் துறையில் அமெரிக்கா மிகத் தீவிரமாக ஈடுபடும்

வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி சிலியா புளோரஸ் ஆகியோர் அமெரிக்காவின் அதிரடி இராணுவ நடவடிக்கையின் மூலம் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அந்த நாட்டின் எண்ணெய் துறையில் அமெரிக்கா மிகத் தீவிரமாக ஈடுபடும் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஃபொக்ஸ் நியூஸ் ஊடகத்திற்கு கருத்து தெரிவித்த அவர், “உலகிலேயே மிகப்பெரிய மற்றும் மிகச் சிறந்த எண்ணெய் நிறுவனங்கள் எம்மிடமே உள்ளன.

எனவே, வெனிசுவேலாவின் எண்ணெய் விவகாரங்களில் நாங்கள் இனி மிகத் தீவிரமாக ஈடுபடப் போகிறோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகின் மிகப்பெரிய மசகு எண்ணெய் இருப்பைக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றான வெனிசுவேலாவில், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதன் பின்னர் அதன் இயற்கை வளங்களை அமெரிக்க நிறுவனங்கள் ஊடாகக் கையாளப் போவதை ட்ரம்பின் இந்த அறிவிப்பு உறுதிப்படுத்தியுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு நாட்டின் தலைவரைக் கைது செய்த பின், அந்த நாட்டின் பிரதான வளத்தை இலக்கு வைத்து அமெரிக்க ஜனாதிபதி பேசியிருப்பது சர்வதேச அரசியல் அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இந்த அதிரடி நடவடிக்கையை ரஷ்ய ஜனாதிபதி உள்ளிட்ட தலைவர்கள் கண்டித்துள்ளனர்.

ஒரு நாட்டின் இறையாண்மையில் அமெரிக்கா தலையிடுவது ஆபத்தான முன்னுதாரணம் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.




# வெனிசுவேலா மீது அமெரிக்க தாக்குதல்: நாடு கடத்தப்பட்ட அதிபரும் மனைவியும்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

**(உலகின் எந்த மூளையில் கனிம வளங்கள் இருந்தாலும் அங்கே அமெரிக்கா கால்வைத்து, அங்கே மனித உரிமை, ஜன நாயகம் என்று எதையாவது சொல்லி அந்த நாட்டை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது வரலாறாகும்)**

தென் அமெரிக்க நாடான வெனிசுவேலாவில் இருந்து அமெரிக்காவிற்குள் போதைப்பொருள் கடத்தப்படுவதாகவும், இதனால் அமெரிக்க இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகும் சூழல் ஏற்படுவதாகவும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறி வந்தார். மேலும் போதைப்பொருள் கடத்தலுக்கு அதிபர் நிகோலஸ் மதுரோ உடந்தையாக இருக்கின்றார் என டிரம்ப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த குற்றச்சாட்டின் அடிப்படைக் காரணம் ஆக்கிரமிப்பு நோக்கமே என்பது வெளிப்படை. உலகின் எந்த மூளையில் கனிம வளங்கள் இருந்தாலும் அங்கே அமெரிக்கா கால்வைத்து, அங்கே மனித உரிமை, ஜனநாயகம் என்று எதையாவது சொல்லி அந்த நாட்டை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது வரலாறாகும். இதனாலேயே தன் காலடியில் இருக்கும் வெனிசுவேலாவை நோக்கி அமெரிக்கா தற்போது சென்றுள்ளது.

வெனிசூவேலா தென் அமெரிக்காவில் அதிக கச்சா எண்ணெய் (Crude Oil) வளம் கொண்ட நாடு. சவூதி அரேபியா, ரஷ்யாவை விட அதிக எண்ணெய் அங்கேதான் இருக்கிறது. அதுவும் செறிவு வாய்ந்த கச்சாய் எண்ணெய் என்பது அதன் சிறப்பம்சம் அமெரிக்காவிற்கு அதிக தேவை கொண்டதாகும்.

### அமெரிக்கா குண்டுவீச்சு:

கடந்த சில மாதங்களாக வெனிசுலா கடற்பகுதியில் அமெரிக்க கடற்படை ரோந்து பணியில் ஈடுபட்டு வெனிசுவேலாவில் இருந்து போதைப்பொருள் கடத்தி வந்தன எனக் கூறி பல்வேறு கப்பல்களைத் தாக்கியுள்ளது.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த வெனிசுவேலா அதிபர் நிகோலஸ் மதுரோ, அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தை முறியடிப்போம் என சூளுரைத்தார்.

வெனிசுவேலாவின் தலைநகர் கராகஸ் கடந்த சனிக்கிழமை அதிகாலை ஏழு இடங்களில் அமெரிக்க ராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை. தாக்குதல் காரணமாக வெனிசுவேலா ராணுவ தளத்திற்கு அருகில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. வெனிசுவேலாவில் அவசர நிலை



பிரகடனம் செய்யப்படுவதாவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வெனிசுவேலா நாட்டின் அதிபரும்,

தொடர்ச்சி▼

# வெனிசுவேலா மீது அமெரிக்க தாக்குதல்: நாடு கடத்தப்பட்ட அதிபரும் மனைவியும்!



தொடர்ச்சி▲

அவரது மனைவியும் நாடு கடத்தப்பட்டதாக டிரம்ப் அதிரடியாக அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், வெனிசுவேலா மீது அமெரிக்கா வெற்றிகரமான தாக்குதலை நடத்தியுள்ளது. வெனிசுவேலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவும், அவரது மனைவியும் சிறைபிடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர். அமெரிக்க சட்ட அமலாக்கத்துறையுடன் இணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

தங்கள் நாட்டின் இறையாண்மையை மீறி வெனிசுவேலாவில் இராணுவ வசதிகள் மீது அமெரிக்கா குண்டுவீச்சு நடத்தியதாக குற்றம் சாட்டியுள்ளது. வெனிசுவேலா அரசாங்கம் தற்போது தேசிய அவசரகால நிலையை அறிவித்துள்ளது.

### இராணுவ ஆக்கிரமிப்பு தொடருமா?

ஜனவரி 3, 2026 சனிக்கிழமை கராகஸில் நடந்த தொடர் குண்டு வெடிப்புகளுக்குப் பிறகு, வெனிசுவேலாவின் மிகப்பெரிய இராணுவ வளாகமான ஃபுர்டே டியுனாவில் பாரிய தீ விபத்து ஏற்பட்டது. அத்துடன் கராகஸில் விமான நிலையத்தில் பாரிய குண்டு வெடிப்புகள் ஏற்பட்டன.

கரீபியன் கடலில் கடற்படை பணிக்குழுவை அனுப்பியுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், வெனிசுவேலா மீது தரைவழித் தாக்குதல்கள் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளை எழுப்பியதன் பின்னர் இந்த தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன.

வெனிசுவேலா தலைநகர் கராகஸ் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள இராணுவ நிலைகள் உட்பட பல இலக்குகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பே இந்தத் தாக்குதல்களுக்கு உத்தரவிட்டுள்ளார் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனை உறுதிப்படுத்தி வெனிசுவேலா அரசாங்கம் பல மாநிலங்களில் பொதுமக்கள் மற்றும் இராணுவ நிறுவல்கள் மீது அமெரிக்கா தாக்குதல்களை நடத்தியதாக குற்றம் சாட்டியுள்ளது. இது இராணுவ ஆக்கிரமிப்பு என்றும் விவரித்து உள்ளது.

சனிக்கிழமை அதிகாலை கராகஸில் பலத்த குண்டு வெடிப்புகள் மற்றும் தாழப் பறக்கும் விமானங்கள் காணப்பட்டன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஃபுயர்ட் டியூனா (Fuerte Tiuna) இராணுவத் தளம் மற்றும் லா கார்லோட்டா (La Carlota) விமானத் தளம் உட்பட முக்கிய இராணுவ நிலைகளில் புகைமண்டலம் காணப்பட்டன என நேரில் கண்ட சாட்சிகள் தெரிவிக்கின்றன.

தலைநகர் கராகஸிலும், மிராண்டா, அரகுவா மற்றும் லா குய்ரா மாநிலங்களிலும் தாக்குதல்கள் நடந்தன என அரசாங்கம் கூறியுள்ளது. வெனிசுவேலாவின் எண்ணெய் மற்றும் கனிம வளங்களைக் கைப்பற்றும் முயற்சியில் வாஷிங்டன் இந்த தாக்குதலை நடத்தியதாகவும் வெனிசுவேலா அரசு குற்றம் சாட்டியுள்ளது. அத்தகைய முயற்சிகள் வெற்றிபெறாது என்று சபதம் செய்துடன், அந்த நாட்டு அரசு அவசரகால நிலையை அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த இராணுவ ஆக்கிரமிப்பை வெனிசுவேலா அரசு கடுமையாக நிராகரித்துள்ளதுடன் கண்டித்துள்ளது. அமெரிக்கா, வெனிசுவேலாவின் எண்ணெய் மற்றும் கனிம வளங்களைக் கைப்பற்றும் முயற்சியில் இந்தத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளது.

### போதைப்பொருள் இலக்குகள்

அமெரிக்கா, வெனிசுவேலாவுக்கு எதிராக பல மாதங்களாக தொடர்ந்து இராணுவ அழுத்தம் கொடுத்து வந்தது. மேலும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக டிரம்ப் நிர்வாகம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகள், மதுரோ அரசாங்கத்தை பதவியில் இருந்து அகற்றும் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகப் பார்க்கப்படுகிறது.

வெனிசுவேலாவில் சமீபத்திய வாரங்களில் பதற்றம் அதிகரித்து வந்தது.

இந்த வாரத் தொடக்கத்தில், வெனிசுவேலா பிரதேசத்தில் நடந்த முதல் தாக்குதலாக, போதைப்பொருள் படகுகள் நிறுத்தும் பகுதியில் தாக்குதல் நடத்தியதாகவும் டிரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி போதைப்பொருள் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்திய வெனிசுவேலா உட்பட இலத்தீன் அமெரிக்க பிராந்தியம் மீது தரை வழித் தாக்குதல் நடத்துவதாக பலமுறை அச்சுறுத்தியுள்ளார். ஆனால் அமெரிக்காவை சீர்குலைக்கும் வகையில் வெனிசுவேலாவின் மதுரோ ஒரு கடத்தல் அமைப்பை வழிநடத்துகிறார் என்று அவர் ஆதாரங்களை வழங்காமல் கூறியுள்ளார்.

### டெல்டா படையின் அதிரடி தாக்குதல்:

டெல்டா படையால் (Delta force) சனிக்கிழமை இரவு மின்னல் வேகப் படை நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ கண்கள் மறைக்கப்பட்டு கைவிலங்குடன் தோன்றும் படம் ஒன்றை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ளார்.

தொடர்ச்சி▼



# வெனிசுவேலா மீது அமெரிக்க தாக்குதல்: நாடு கடத்தப்பட்ட அதிபரும் மனைவியும்!

தொடர்ச்சி▲

கடந்த பல மாதங்களாகத் திட்டமிடப்பட்டு வந்த இந்த படை நடவடிக்கை, வெனிசுவேலா அரசாங்கத்தினுள் ஊடுருவியிருந்த சிஐஏ (CIA) உளவாளிகளே ஜனாதிபதி மதுரோவின் இருப்பிடத்தைக்

கண்காணிப்பதற்கு உதவினர் என்று தகவல் வெளியாகியுள்ளது. வெனிசுவேலா மீதான தாக்குதலுக்கு 150க்கு மேற்பட்ட அமெரிக்கப் போர் விமானங்கள் பங்குவகித்துள்ளன.

அமெரிக்க வீரர்கள் மதுரோவின் வதிவிடத்துக்குள் உள்ளூர் நேரப்படி அதிகாலை இரண்டு மணியளவில் நுழைந்தனர் எனக் கூறப்படுகிறது. அந்த வேளை வானில் பறந்துகொண்டிருந்த அமெரிக்கப் போர் விமானங்களால் பெரும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஸ்ரீல்த் ஹெலிக்கொப்ரர்கள் மூலம் (stealth helicopters) அங்கு குதித்த கொமாண்டோக்கள் வீட்டைச் சுற்றி வளைத்துக் கொண்டனர்.

மதுரோவை அமெரிக்க இராணுவத்தின் உயர் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவாகிய டெல்டா படையே (Delta force) கைப்பற்றியது. ஒரு கோட்டை போன்ற பெரிய வீடு ஒன்றில் இருந்த சமயமே இருவரையும் கைது செய்துள்ளனர். அங்கு ஒரு பலத்த பாதுகாப்புக் கவச அறை இருந்துள்ளது. அதற்குள் சென்று ஒளிந்து கொள்ள முயன்ற போதும் அது முடியாமற் போனது. அந்த அறையின் இரும்புக் கதவை உடைத்துத் திறப்பதற்கு அமெரிக்கப் படைகள் தயாராக இருந்தன. ஒரு வேளை அவர் தப்பிச் செல்ல முயன்றிருந்தால் நிச்சயம் கொல்லப்பட்டிருப்பார்.

மதுரோவும் மனைவியும் சம்பவ இடத்திலேயே படையினரிடம் சரணடைந்தனர் என்று கூறப்படுகிறது. பின்னர் இருவரும் ஹெலிக்கொப்டர் மூலம் ஈவோ ஜீமா (Iwo Jima) என்ற அமெரிக்கப் போர்க் கப்பலுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அந்தக் கப்பல் நியூயோர்க் நோக்கிப் பயணிக்கிறது.

இந்த படை நடவடிக்கையை நேரலையில் பார்த்துக் கொண்டிருந்தேன். இதுபோன்ற காட்சி எதையும் நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை. அதை நேரலையில் பார்த்து தாக்குதலின் ஒவ்வொரு அம்சத்தையும் அவதானிக்க முடிந்தது. அதை ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் போலவே பார்த்தேன் என அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

**சர்வதேச கண்டனம்:**

ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் அமெரிக்காவின் வெனிசுவேலாவின் இறையாண்மையை கேள்விக் குறியாக்கும் விடயம் மட்டும் அல்ல சர்வ தேச சட்டத்திற்கு முரணானது என தனது கண்டத்தை பதிவு செய்துள்ளார்.

பல்வேறு இலத்தீன் அமெரிக்க நாடுகளின் தலைவர்கள் இந்த தாக்குதலை கண்டித்து வருகின்றனர்.

குறிப்பாக ஈரான் மீது அமெரிக்க தாக்குதல் மீண்டும் நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் சூழலில், தனது கண்டனத்தை ஈரான் அரசு தெரிவித்துள்ளது. உலக நாடுகள் பலவும் இச் செயற்பாட்டிற்கு கண்டனம் தெரிவித்தும் வந்தாலும், மேற்குலக நாடுகளின் தலைவர்கள் தங்கள் ஆதரவை தெரிவித்து உள்ளனர்.









# இன்றைய ராசி பலன்கள்- 04.01.2026




இன்று அதிக கவலையுடன் காணப்படுவீர்கள். உற்சாகமாக இருக்க முயலுங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை முடிப்பதற்கு கூடுதல் கவனம் தேவை. அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

இன்று நீங்கள் சகஜமான உறுதியான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்லுறவை அனுபவிக்க இயலும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியமாக இருக்க யோகா அல்லது




சுய முயற்சி மூலம் நீங்கள் உங்கள் இலக்குகளை அடையலாம். எந்த செயலையும் நம்பிக்கையுடன் செய்யுங்கள்.

பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். கடின உழைப்பிற்கான பாராட்டு கிடைக்கும்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். இது மேலும் வளரும். உங்கள் துணை சம்பந்தமான இன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது. நீங்கள் துடிப்புடனும் உற்சாகமாகவும் இருப்பீர்கள்.




இன்று கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

பணிகள் அதிகமாக காணப்படும். சில சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் அமைதியின்மை யை உணர்வீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் கையில் அதிக பணம் காணப்படாது. மேலும் மருத்துவ செலவுகளை நீங்கள் மேற்கொள்ள நேரும்.

இன்று தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கார




இன்றைய முக்கியமான விஷயங்களை வேறு நாளைக்கு தள்ளிப் போடுங்கள். சுய முயற்சியில் நீங்கள் மனப் போராட்டங்களை சந்திப்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே உங்கள் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரலாம்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. குடும்பப் பிரச்சினை காரணமாக தேவையற்ற மோதல்கள் ஏற்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. இன்று ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இன்று நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

நீங்கள் தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினையால் பாதிக்கப்படலாம். வறுத்த கார உணவு வகைகளை




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். எனவே கவனமாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று பணிகளைக் கையாள்வது அவ்வளவு எளிதாக இருக்காது. இன்று சுமூகமான நாளாக இருக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் பணிகளை கவனமுடனும் நம்பிக்கையுடனும் மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க இயலாது. இன்று உங்கள் நண்பர்களின் தவறான ஆலோசனை கேட்டு நடப்பீர்கள்.




இன்று நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி நற்பலன் காணுங்கள்.

நீங்கள் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் புரிந்துணர்வு சக்தி மூலம் நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பீர்கள். உங்கள் சமயோஜித புத்தியும் நேர்மறை எண்ணங்களும் இந்தச் சூழ் நிலையை உருவாக்கித் தரும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். நீங்கள் இன்று உங்கள் குடும்ப நலனுக்காக செலவு செய்வீர்கள்.




உங்கள் தினசரி செயல்களை மேற்கொள்வதில் சற்று எச்சரிக்கை தேவை. உங்கள் வெற்றிப் பாதையின் குறுக்கே பதட்டமும் ஏமாற்றமும் காணப்படும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக இன்று உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு செலவு செய்வீர்கள். அது வீண் செலவாக இருக்கும். திட்டமிட்டு கட்டுப்பாட்டுடன் செலவு செய்வது உதவிகரமாக இருக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்களை அதிகம்




இன்றைய நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள். உங்களிடம் வெற்றி பெறவோம் என்ற உறுதி உள்ள காரணத்தால் நீங்கள் வெற்றியை எளிதில் அடைவீர்கள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். பொதுவான விஷயங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் சக பணியாளர்களிடம் ஒத்த உணர்வுகளை அனுபவிக்க இயலும்.

நீங்களும் உங்கள் துணையும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள். ஆக்கப்பூர்வமான பேச்சு வார்த்தை காரணமாக உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் கையிலிருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில்

# இன்றைய ராசி பலன்கள்- 04.01.2026




உங்கள் திறமைகளை வெளிப் படுத்த உகந்த நாள். முக்கிய முடிவு கள் எடுக்க சிறந்த நாள். இன்றைய நாளை சிறப்பாக பயன் படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிக்கு பலன் கிடைக்கும். நீங்கள் சிறப்புடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உறவில் காணப்படும் நல்ல புரிந்துணர்வே இதற்கு காரணம்.நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். இன்றைய நாளை சிறப்பாக திட்டமிட்டு முன்னேற வேண்டும்.

இன்று நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று தவறுகள் செய்ய வாய்ப் புள்ளதால் புத்திசாலித்தனத்துடன் உங்கள் செயல்களை மேற்கொள்ள வேண்டும்.பொறுமையும் உறுதியும் இன்று குறைந்து காணப்படும். இந்தப் பண்புகளை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.நீங்கள் பணியில் தவறுகள் செய்வீர்கள். இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

இன்று நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். கடுமையான செயல்கள் மற்றும் உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவில் நல்லிணக்கம் பராமரிக்க இயலாது. அதிகரிக்கும் செலவுகள் கவலை அளிக்கும். நீங்கள் பணத்தை சிறந்த முறையில்செலவிட வேண்டும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில்செலவு செய்ய வேண்டும்.




எதிர்மறை எண்ணங்களை விலக்கி நேர்மறை எண்ணங்களை மேற்கொள்ள வேண்டும். நம்பிக்கை யுடன் செயல்பட்டால் உங்கள் இலக்குகளில் வெற்றி காணலாம்.

தவறான புரிந்துணர்வு காரணமாக சக பணியாளர்களுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது உங்கள் பணியின் வளர்ச்சியை பாதிக்கும்.

தவறான புரிந்துணர்வு மற்றும் அபிப்ராயம் காரணமாக உங்கள் துணையுடன் அமைதியின்மை காணப்படும்.நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை குடுபத்திற்கு செலவு செய்வீர்கள். இன்று கனிசமனா தொகை இழப்பதற்கு வாய்ப்பு உள்ளது.




தொலை தூர நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் ஆதரவைப் பெறு வீர்கள். அதிக பயணங்கள் மேற்கொள் வீர்கள்.

சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் முயற்சிக்கு நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையின் அன்பைப் பெறுவீர்கள். இன்று அதிக பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள். ஆரோக் கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. சில கடினமான சூழ்நிலைகள் காணப்பட்டாலும் நீங்கள் உற்சாகமான மன நிலையில் இருப்பீர்கள்.

# சார்க் பத்திரிகையாளர் மன்றத்தின் வருடாந்த சர்வதேச மாநாடு இன்று

பத்திரிகையாளர்கள் துறையின் ஆசிய பிராந்தியத்தில் மிகவும் பிரபல மான பத்திரிகையாளர் மன்றமான சார்க் பத்திரிகையாளர் மன்றத்தின் வருடாந்த சர்வதேச மாநாடு இன்று இந்தியாவில் ஆரம்பமாகவுள்ளது.

2026 சார்க் பத்திரிகையாளர் மன்ற மாநாட்டில், பிராந்தியத்தில் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு எதிரான தடைகள், ஊட கங்களுக்கும், ஊடகப் பணியாளர்களுக் கும் எதிரான அச்சுறுத்தல்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளன.

சார்க் பத்திரிகையாளர் மன்றமானது, ஆசிய பிராந்தியத்தில் பெருமளவான உறுப்பினர்களைக் கொண்ட பிரபலமான பத்திரிகையாளர் மன்றாக உள்ளது.

இதனூடாக ஆசிய பிராந்தியத்தில் மாத்திரமின்றி, சர்வதேச ரீதியாகவும் ஊடகத்துறைக்கு ஏற்படும் சவால்கள் குறித்தும் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகிறது.

அதற்கமைய, சார்க் பத்திரிகையாளர் மன்றத்தின் இரண்டாவது மாநாடு, இந்தியாவின் பீஹார் மாநில நாளந்தா திறந்த பல்கலைக்கழகத்தில், இன்று மற்றும் நாளை இடம்பெறவுள்ளது.

மாநாட்டில் வெளிநாடுகளைச் சேர்ந்த பல பிரதிநிதிகள், பத்ம ஸ்ரீ விருது பெற்ற வர்கள், மூத்த பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஆராய்ச்சியா ளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்த மாநாட்டில் முதன்மை விருந்தினராக பீஹார் மாநில ஆளுநரும், முன்னாள் சிக்கிம் ஆளுநருமானகங்கா பிரசாத் கலந்து கொள்வதாக, சார்க் பத் திரிகையாளர்கள் மன்ற இந்திய கிளை யின் தலைவர் சசி பூஷண் குமார் தெரி வித்துள்ளார்.

SAARC Journalist Forum

குறிப்பாக, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இடம்பெறும் ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்துச் சுதந்திர மீறல்கள் குறித்தும்சார்க் பத்திரிகையாளர்கள் மன்றம், விரிவாக கலந்துரையாடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் சர்வதேச கலாசார தூதர் சரிதா பத்து, நேபாளத்தைச் சேர்ந்த சார்க் பத்திரிகையாளர்கள் மன்றத்தின் சர்வதேச தலைவர் ராஜு லாமா, பங்களாதேஷைச் சேர்ந்த சர்வதேச பொதுச் செயலாளர் முகமது அப்துர் ரஹ்மான், தாய்லாந்தைச் சேர்ந்த பி.சி.சந்திரா உள்ளிட்டோர் சிறப்பு விருந் தினர்களாக கலந்து கொள்கிறார்கள்.